FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301694

1. District : Tiruvallur மாவட்டம் PS: Vigilance & Anti-Corruption காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 13/AC/2026/TVL முத.அ. எண் Date: 11/08/2026 நாள்

2. (I) Act சட்டம்: The prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: U/s. 7(a) & 12 r/w. 7(a) of the PC (Amendment) Act, 2018.
(II) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(III) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(IV) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 10/8/2026 Date to : நாள் வரை 11/8/2026
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் at about 15-30 hrs Time to : நேரம் வரை at about 13.00 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11/8/2026 Time : நேரம் at about 16.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11/8/2026 Time : நேரம் at about 17.00 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North-East - About 60 kms.
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி Ponneri Sub-Register office, Tiruvallur District

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. P. Nakarajan (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் Perumal
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 49 years (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Car Cabs Driver (g) Address : முகவரி No: 10/28, Kannagi Street, Thiruvalluvar Nagar, Arumbakkam, Chennai-106.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Accused:- A-1 Tr. Sankar, Sub-Registrar, Ponneri Sub Registry,
A-2 Tr. Ramesh, Document Writer, Ponneri. and
A-3 Tmt. Nithya, Assistant to Document Writer (A-2), Ponneri.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— Nil —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Demanded Rs. 15,000/- as bribe to release the complainant's registered 2 sale deed documents.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு
-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்
-

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
Submitted:- When I was present at Tiruvallur Vigilance office on 11/8/2026 at about 16.00 hrs. Our DSP/VAC/TVR called me and instructed to register a case on the complaint of one Tr. P. Nalarajan and the contents of the complaint as follows:- அனுப்புநர், 11/8/2026, பெ. நடராஜன், வயது 49, த/பெ. பெருமாள், எண். 10/28, கன்னிகை தெரு, கிருஷ்ணாபுரம் ரவர், அலெப்பாக்கம், சென்னை-106. பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருவள்ளூர் மாவட்டம்.

[The FIR contents continue to the next separate sheet.]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed U.S. TAMIZHARASI Rank ...INSPECTOR... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...VAC, TIRUVALLUR.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Nalarajan 11/08/2026.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
11/8/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 12/8/2026 about 09.00 hrs.

Name: பெயர் [U. S. TAMIZHARASI]
Rank: நிலை ..... No. எண் .....
INSPECTOR OF POLICE, VAC, TIRUVALLUR.

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.13/AC/2026/TVL, U/s. 7 (a) & 12 r/w. 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 continues . . .)

ஐயா, நான் மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் எனது அம்மா, மனைவி மற்றும் 2 பிள்ளைகளுடன் வசித்து வருகிறேன். நான் 8-ம் வகுப்பு வரை படித்துவிட்டு, லோனில் சொந்த கார் ஒன்று வாங்கி அதனை ஓலா கேப்பில் ஓட்டி சம்பாதித்து வருகிறேன். மேலும், நான், 8,500/- ரூபாய் மாத வாடகை வீட்டில்தான் வசித்து வருகிறேன். அதனால், குறைந்த தொகையில் வீட்டு மனை வாங்கி வீடு கட்ட முடிவு செய்து, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுக்கா, சிரலபாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள கின்னஸ் நகரில் பிளாட் எண்.70 (876 சதுரடி) மற்றும் 71 (735 சதுரடி) கொண்ட இரண்டு மனைகளை தலா 1 லட்சத்திற்கு எனக்கு தெரிந்தவரின் மூலம் சென்னையைச்சேர்ந்த ஜோதி என்பவரிடமும், அவரது மகன் பிரசாத் என்பவரிடமிருந்தும் வாங்கி, அதனை பதிவு செய்ய பொன்னேரி சென்று விசாரித்து திரு.ரமேஷ் என்ற ஆவண எழுத்தர் அவர்கள் மூலம் கடந்த 08.08.2026-ந்தேதி அனைத்து விவரங்களையும் கொடுத்ததில், அவர் மேற்படி இரண்டு ஆவணங்களையும் பதிவு செய்ய ரூ.33,870/- பணம் கேட்டு அதன் விவரங்கள் அடங்கிய துண்டு சீட்டுகள் இரண்டு கொடுத்தார். அதனை குறைத்து கேட்டபோது ரூ.30,870/- பணம் கொடுக்கச்சொல்லி ரூ.10,000/-ஐ அன்றைய தினமே முன் பணமாக பெற்றுக்கொண்டு, திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு வருமாறு கூறினார். நாங்களும் வந்து திரு.ரமேஷ் அவர்களை பார்த்தபோது, மீதிப்பணம் ரூ.20,000/-ஐ பெற்றுக்கொண்டு, மீதிப்பணம் ரூ.870/-ஐ பிறகு கொடுங்கள் என்று கூறி, அவரது உதவியாளர் திருமதி.நித்யா என்பவரிடம் ஆவணங்களை கொடுத்து சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பினார். அந்த ஆவணத்தை சார்பதிவாளர் திரு.சங்கர் அவர்களிடம் கொடுத்தபோது, அவர் மேற்படி ஆவணங்களை பார்த்துவிட்டு, இதற்கு முன்புள்ள ஆவணங்கள், கடந்த 2013-ல் பதியப்பட்டுள்ளது பார்த்தீர்களா என்று திருமதி.நித்யா அவர்களை கேட்டுவிட்டு அவரது டேபிள் மேலேயே வைத்துவிட்டார். அதனை நித்யா அவர்கள், திரு.ரமேஷிற்கு போன் செய்து விவரத்தை தெரிவித்தபோது, திரு.ரமேஷ் சார்பதிவாளரிடம் போனில் பேசிய பிறகு, என்னுடைய இரண்டு பத்திரங்களையும் பதிவு செய்து, அதற்கான ரசீது எண்.9752/2026 & 9753/2026 முறையே ஆவண எண்கள்-P/Ponneri/734/2026 & P/Ponneri/735/2026 எனவும், புல எண் விடுபட்டிருப்பது குறித்தான மதிப்பு நிர்ணயம் காரணமாக நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டு ரசீதுகள் கொடுக்கப்பட்டது. இதுதொடர்பாக நித்யா அவர்கள் சார்பதிவாளரிடம் பேசியபோது, மீண்டும் திரு.ரமேஷ் அவர்களிடம் பேசினார். தொடர் பேச்சுகளுக்கு பிறகு, நித்யா அவர்கள் எங்களை வெளியே அழைத்துக்கொண்டு அவர்களது அலுவலகத்திற்கு மதியம் சுமார் 03.30 மணிக்கு சென்றபோது, திரு.ரமேஷ் அவர்களிடம் மேற்படி ஆவணங்களை விடுவித்து பார்ட்டியிடம் கொடுக்க ரூ.20,000/-ம் சார்பதிவாளர் திரு.சங்கர் கேட்பதாக தெரிவித்தார். அதற்கு ரமேஷ்

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.13/AC/2026/TVL, U/s. 7 (a) & 12 r/w. 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 continues . . .)

அவர்களும் பணத்தை கொடுத்துவிட்டு ஆவணங்களை பெற்றுக்கொள்ளுமாறு என்னிடம் தெரிவித்தார். அப்போது எனக்கு நிலத்தை விற்பனை செய்யும் திருமதி.ஜோதி அவர்களின் தம்பி திரு.கலையரசன் அவர்களும் உடனிருந்தார். நான் அவ்வளவு பணம் இல்லையென்று கூறியதற்கு நீங்களே நாளை சார்பதிவாளரை பார்த்து பேசிக்கொள்ளுங்கள் என்று கூறினார். அதனால் நாங்கள் வந்துவிட்டு மறுநாள் அதாவது இன்று 11.08.2026-ந்தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு பொன்னேரி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கு அமர்ந்திருந்த சார்பதிவாளரை நானும், திரு.கலையரசன் அவர்களும் பார்த்தபோது, என்ன வேண்டும் என்று கேட்டதற்கு, எனது ரசீதுகளை காட்டி ஆவணங்களை கேட்டபோது, ஏதும் பெண்டிங் இல்லையே என்று கூறிவிட்டு அலுவலரை அழைத்து எந்த ஆவணம் பாருங்கள் என்று கூறியதும், அவரும் கொண்டு வந்து சார்பதிவாளரிடம் கொடுத்ததற்கு, அதைப்பார்த்துவிட்டு, யார் மூலம் வந்தது என்று கேட்டதற்கு, அவர்கள் நித்யா என்று சொன்னதும், அவரை வரச்சொல்லுங்கள் என்று கூறினார். நாங்கள் சென்று அவரை சார்பதிவாளர் அழைப்பதாக டாக்குமெண்ட் அலுவலகத்திற்கு கீழே இருந்தவரிடம் சொன்னபோது, அவரும் வந்து சார்பதிவாளரை பார்த்தார். அப்போது அவரை அழைத்துக்கொண்டு பக்கத்தில் இருந்த அறைக்குள் சென்றபோது நானும் சென்று சற்று தள்ளி நின்றேன். அப்போது சார்பதிவாளர், சொன்னதை செய்யாமல் ஏன் இதை பதிவு செய்தீர்கள், நான் சொன்னதை முடித்துவிட்டு வாருங்கள் என்று கூறி என்னை அவருடன் போகச்சொன்னார். ஆனால் திருமதி. நித்யா சிறிது நிமிடங்கள் கழித்து வந்து எங்களை அழைத்துக்கொண்டு அலுவலகத்திற்கு வெளியே வந்து, நேற்றே சொல்லியனுப்பினோம், நீங்கள் இப்போது நேராக ஏன் அவரை பார்த்தீர்கள், நான் கேட்ட பணம் எங்கே என்று என்னை திட்டுகிறார். நீங்கள் போய் ரமேஷ் அவர்களை பாருங்கள் என்று கூறினார். அதேபோல் நாங்கள் மாடிக்கு சென்று திரு.ரமேஷ், ஆவண எழுத்தாளரை பார்த்து, சார்பதிவாளர் அலுவலகத்தில் நடந்த விவரங்களை தெரிவித்தோம். அதற்கு திரு.ரமேஷ் அவர்கள் நித்யாவிற்கு போன் செய்தபோது, ரூ.15,000/-ம் கொடுத்தால்தான் ஆவணங்களை ரிலீஸ் செய்வதாக தெரிவித்த விவரத்தை என்னிடம் கூறினார். ஏன் அவ்வளவு பணம் கேட்கிறார் என்று கேட்டதற்கு, நீங்கள் பணம் தராவிட்டால், உங்கள் ஆவணங்களின் பதிவு கடந்த 2013-ம் ஆண்டில் செய்யப்பட்டுள்ளது. அதனால் கைடுலைன் மதிப்பீட்டினை சரிபார்க்க அனுப்பிவிட்டால் ரூ.25,000/-ற்கு மேல் கட்டவேண்டியிருக்கும், அதனால் அவர் கேட்கும் பணத்தை கொடுத்துவிட்டால், உடனே அல்லது மறுநாளே ஆவணங்கள் கிடைத்துவிடும், அதற்கு ஏற்பாடு செய்துக்கொண்டு வாருங்கள் என்று கூறியனுப்பினார். எனக்கு திரு.சங்கர், சார்பதிவாளர், பொன்னேரி அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.15,000/-ம் கொடுத்து பதிவு செய்த ஆவணங்களை பெற

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.13/AC/2026/TVL, U/s. 7 (a) & 12 r/w. 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 continues . . .)

விருப்பம் இல்லாததால், அவருக்கு எதிராகவும், அவருக்கு உதவியாக லஞ்சப்பணத்தை பெற்றுக்கொடுக்கும் திரு.சுரேஷ் மற்றும் திருமதி.நித்யா ஆகியோர்களுக்கு எதிராக புகார் ஒன்றை தயார் செய்துக்கொண்டு, அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/-த்துடன் இன்று 11.08.2026-ந்தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் தங்கள் அலுவலகத்திற்கு வந்து இந்த புகாரை அளிக்கிறேன். தாங்கள் மேற்குறிப்பிட்ட 3 நபர்களுக்கு எதிராக எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு, நான் எனது முழு ஒத்துழைப்பையும் கொடுப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு **SdXXX P.Natarajan, 11.08.2026.**

Inspector G.S.Tamizharasi, Register a trap case and organize trap proceedings as per the instruction of Higher Officers of DVAC. SdXXX R.Jayakumar, 11.08.2026.

Honoured Madam,

Received the above complaint on 11.08.2026 at about 16.00 hrs from DSP/VAC/Tiruvallur, after getting proper permission from DVAC, a discreet enquiry was conducted through my sources. Based on the outcome of the enquiry, the antecedents, reputation of the accused and genuineness of the complainant are verified. Since, there is prima-facie made out to register a FIR on said complaint. Hence, I registered a case in Tiruvallur V&AC, Cr.No.13/AC/2026/TVL u/s. 7 (a) & 12 r/w. 7 (a) of The Prevention of Corruption (Amendment) Act-2018 on 11.08.2026 at about 17.00 hrs. **SdXXX(G.S.TAMIZHARASI),** Inspector of Police, Vigilance and Anti-Corruption, Tiruvallur.

The original FIR along with the Complaint are sent to the court of Hon'ble Principal District and Sessions Judge, Tiruvallur and the other copies to the concern officers of DVAC.

11/8/2026

(G.S.TAMIZHARASI),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruvallur.